
# பயிற்சி 03

**லதுசனா என்ற மாணவி படத்திலுள்ளவாறு உப்புப் பளிங்குகளை எடுத்து அதனுள் காபன் மின்வாய்களை வைத்து மின்கலத்துடன் இணைத்து அம்பியர்மானியின் திரும்பலை அவதானித்தார்.**




1. மேற்படி பரிசோதனையில் அம்பியர்மானியின் காட்டி திரும்பலைக் காட்டியதா?

2. அதற்கான காரணம் யாது?

3. மேற்படி பளிங்குகளை திரவமாக்கும் வரை வெப்பமாக்கி (உருக்கி) அல்லது நீரில் கரைத்துக் கரைசலாக்கி அதன் பின் மேற்படி பரிசோதனையை மேற்கொள்ளின் உமது அவதானம் யாது?

4. மேற்படி செயற்பாட்டின் வாயிலாக நீர் எடுக்கும் முடிவு யாது?

5. பெற்றோல், பரபின், மண்ணெண்ணெய் போன்ற ஐதரோக்காபன்கள் எவ்வகை பிணைப்பை உடைய சேர்வைகள்?



6. மேற்படி சேர்வைகள் மின்னைக் கடத்துமா?

7. மேற்படி கலத்திற்கு வழங்கப்படும் விசேட பெயர் யாது?

மின்பகுப்புக் கலம்

பங்கீட்டுவலுப்பிணைப்பு

அம்பியர்மானி காட்டி திரும்பலுறும்.

அயன் சேர்வைகளின் நீர்கரைசல்கள் அல்லது திரவங்கள் மின்னைக்கடத்தும்.

இல்லை

திண்ம அயன் பளிங்குகளில் அசையும் தகவுடைய அயன்கள் காணப்படுவதில்லை.

இல்லை மின்னைக் கடத்தாது.

LIVEWORKSHEETS